சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 17.07.2026 SC. 65/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.மகேஸ்வரி | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 14 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் தற்சமயம் சின்னமனூர் அரசு மருத்துவமனையில் முதன்மை குடிமைபணி மருத்துவ அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் 01.03.2022 அன்று கம்பம் அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது இரவு 8.45 மணிக்கு 33 வயதுள்ள அரவிந்த் என்பவரை 01.03.2022 அன்று 8.30 மணிக்கு அவரது வீட்டில் அடையாளம் தெரிந்த நபர் அரிவாளால் தாக்கியதாகவும் அதனால் ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளிப்பதற்காக அழைத்து வந்தனர். அவரை பரிசோதனை செய்தபோது அவருடைய இடது முன்கை துண்டிக்கப்பட்டு அதை தனியாக கொண்டு வந்திருந்தனர். அவருக்கு காயத்திற்கு முதலுதவி சிகிச்சை அளித்து அவரை மேல்சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் முதலில் அவரை பரிசோதித்து வழங்கிய விபத்து பதிவேட்டு சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் கூறிய சங்கதிகளை தான் போலீஸ் விசாரித்ததில் சொன்னேன். மேல் சிகிச்சைக்காக முதலுதவி அளித்து 10–15 நிமிடத்தில் தேனிக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்தேன். அவர் அனுப்பும் போது மணி 9 இருக்கும், அவ்வாறு இருக்கும் போது காவல்துறைக்கு தகவல் தெரிவிப்போம். நேரத்தை விபத்து பதிவேட்டு நகலில் சொல்லவில்லை. ஆனால் தகவல் கொடுத்தோம். விபத்து பதிவேட்டு நகலில் உள்ள காயத்திற்கும், காயம் பட்ட நபருக்கு ஏற்பட்ட காயத்திற்கும், முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்